விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 354 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 22 சனிக்கிழமை (07.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அநுர அரசின் இடைக்கால பட்ஜெட்
## ஏகமனதாக நிறைவேற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசின் 2025 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கான தற்காலிக பட்ஜெட் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2025ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கான பட்ஜெட் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்கள் இதன் மீதான விவாதம் இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விவாத முடிவில் எதிர்க்கட்சி 15

## ரணில் அரசினால் வெளியிடப்பட்ட
## மதுபான அனுமதிப்பத்திரத்துக்கான வர்த்தமானி அறிவித்தலுக்குத் தடை

(கொழும்பு)

மதுபான விற்பனை உரிமத்துக்கான வருடாந்த கட்டணத்தை அதிகரித்து கடந்த அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை உயர்நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்துள்ளது.

இலங்கை மதுபான அனுமதிப்பத்திரம் வைத்திருப்போர் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதியளித்து 15

# ரணில் அரசைப் போலவே
# அநுர அரசு பயணிக்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கடந்த ரணில் அரசாங்கம் செயற்பட்டது போல அநுர அரசாங்கமும் பயணிக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.**



பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த அரசாங்கம் வந்தவுடனேயே மக்கள் ஆணையை மீறியதால் IMF உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டதை சமீப காலத்தில் மிகப்பெரிய துரோகம் என்று சொல்லலாம்.

நான்கு ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வலுவான பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? கடந்த அரசாங்கம் ஒன்பது வருடங்களில் கடனை அடைக்க வேண்டிய நிலையில் நான்கு வருடங்களில் செலுத்துவதற்கு இணங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.(ம-7)

### மன்னாரில்
## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கடற்றொழில் செய்து வந்த குறித்த 15

### விளம்பரங்களில்
## சிறுவர்களை பயன்படுத்த தடை

(கொழும்பு)

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை ஜனவரி முதலாம் திகதி முதல் விளம்பரங்களில் பயன்படுத்துவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுஜன ஊடகப் 15

## வட மாகாணத்தில் பாடசாலைகள் மூடப்படுவது வேதனை தருகிறது

### கலாநிதி ஆறு.திருமுருகன் கவலை



(யாழ்ப்பாணம்)

வடக்கில் பாடசாலைகள் மூடப்படுவது வேதனையளிக்கிறது என அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடக்கில்பல பாடசாலை 15

### அரிசி, தேங்காய்
## தட்டுப்பாடு குறைக்கப்படும்

(கொழும்பு)

சந்தையில் அரிசி, தேங்காய் தட்டுப்பாட்டைக்குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியைத் துறைமுகத்தில் இறக்கி 04 மணித்தியாலங்களுக்குள் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை விரைவில் சந்தைக்கு வெளியிட வேண்டியதன் அவசியத்தின் காரணமாக, இந்தத் தீர்மானம் 15

## சீனி வரியை நீக்குவதற்கு அமைச்சரவை பத்திரம்

(கொழும்பு)

சிவப்பு சீனி மீது VAT வரியை நீக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப் 15

## அரசியலமைப்புக் குழுவில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்ற அரசியலமைப்புக் குழுவின் உறுப்பினராக யாழ்.தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய 11 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 25 பேரிலிருந்து அரசியலமைப்புக்குழுவுக்கான பிரதிநிதி ஒருவரை 15

## மீன்பிடித்த குடும்பஸ்தர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் வான் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தரணிக்குளம் பகுதி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 1945 - 06 - 04



இறப்பு 2024 - 12 - 06

## திருமதி பாக்கியம் முத்துலிங்கம்

அல்லையம்பதி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் முத்துலிங்கம் அவர்கள் நேற்று 06.12.2024 வெள்ளிக்கிழமை இரவு இவ்வுலக வாழ்வை நீத்து இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் முத்துலிங்கம் அவர்களின் பாரியாரும் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை இணையவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னப்பிள்ளை இணையவர்களின் பாசமிகு மருமகளும் அமரர் வசந்தி, ரவிச்சந்திரன்(ஓய்வுபெற்ற மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்), ஜெயச்சந்திரன்(தாதிய உத்தியோகத்தர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), செல்வச்சந்திரன்(ஆசிரியர் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வதனி, விமலா, நீரஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராவகன் (பொறியியலாளர்), ராகுலன்(சந்தைப்படுத்தல் ஆய்வாளர்), சாரங்கன் (பொறியியல்பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்), அபிதாரணி (மென்பொருள் பொறியியலாளர், பருத்தித்துறை), ஸ்ரீமன்(பொறியியல் தொழில்நுட்ப பீடம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), ஸ்ரீநிதி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர் பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அவரின் புகழுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணிக்கு கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி.

077 6181659, 077 666 0484, 077 224 2405

தகவல்: குடும்பத்தினர்

(C-1737)

## யாழில் 45 கிலோ கஞ்சா மீட்பு

ய்ாழ்ப்பாணம் கடற் பரப்பில் வைத்து 45 கிலோகிராமுக்கும் அதிக நிறையுடைய கேரள கஞ்சா போதைப் பொருள் கடற்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா போதைப்பொருள் 20 பொதிகளில் பொதிபிடப்பட்டிருந்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருள் 18 மில்லியன் ரூபாய் பெறுமதியுடையது என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## சபாநாயகர் பட்டதாரியா? நிரூபிக்குமாறு சவால்

(கொழும்பு)

சபாநாயகர் அசோக ரன்வல பட்டதாரி என்பதை நிரூபிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சபாநாயகரால் தான் பட்டதாரி என்பதை நிரூபிக்க முடியாவிட்டால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும், மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் அதனை வெளிப்படுத்த தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தையா நல்லம்மா

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும் கண் விட்டு
மறையாமல் கன காலம் இருப்பீர்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம். நாளை 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

எதிர்வரும் 09.12.2024 அன்று சின்னவி கந்தையா அவர்களின் கீரிமலை புண்ணிய தீர்த்தமும் அந்தியேட்டிக் கிரியையும் செய்ய இருந்தோம். அவரது மனைவி காலமான காரணத்தால் அந்த கிரியைகள் யாவும் ரத்துச் செய்துள்ளோம். என்பதனை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



மலர்வு 27.03.1948 உதிர்வு 05.12.2024

குடும்பத்தினர்

(604)

# மரண அறிவித்தல்



மலர்வு 02.09.1936 உதிர்வு 06.12.2024

## சின்னத்துரை தங்கம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கம்மா அவர்கள் 06.12.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் இராசலட்சுமி(கனடா), லோகேஸ்வரன்(தேவிபுரம்), விஜயலட்சுமி(சத்திய ஞானகோட்டம், வேம்பிராய்), தனலட்சுமி(சுவிஸ்), ஈஸ்வரன்(ஈசன் களஞ்சியம், சாவகச்சேரி), கேதீஸ்வரன்(மடத்தடி, மீசாலை), மகாலட்சுமி (ஜேர்மனி), அன்னலட்சுமி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகனேசன்(கனடா), அமரர் புஸ்பராணி, கேதீஸ்வரன்(சத்திய ஞானகோட்டம், வேம்பிராய்), விஜயதாசன்(சுவிஸ்), யோகேஸ்வரி, அமரர் மதனி, கணேசலிங்கம்(ஜேர்மனி), ஜீவரட்ணம்(வரதன் சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் டினேஸ், தாட்சாயினி, சிந்துயன், கோபிசன், தர்மிலன், டில்சன், டிசாந்தன், கீர்த்திகா, தர்சிகா, கார்த்திகா, தயானந்தன், திவானா, விதுனா, கபினன், தயாநந்தினி, தளிரினி, கயானன், ஹரிஷ், ஹரிணி, விபூசனா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லதுஷா, தனுசிகன், லிந்துசன், ரட்சயன், லோஜிதா, ஆதிரா, கேசிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 08.12.2024 ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி.

தகவல் : மகன் ஈஸ்வரன் (ஈசன் களஞ்சியம் - சாவகச்சேரி) 077 306 8974


(2711)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலம்

## புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டும்

### ரவிகரன் எம்.பி சபையில் கோரிக்கை



(நெளுக்குளம்)

**முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமஅலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் புதிதாக அமைக்கப்படவேண்டுமெனவும் எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் அதனை உள்வாங்குமாறும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாரளுமன்றில் அவரது கன்னியுரையில் வலியுறுத்தியுள்ளார்.**

அதேவேளை அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் பலத்த அழிவுகள் ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களின் துன்பங்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பலத்த வெள்ள அனர்த்தம் காரணமாக பல வீதிகள் பாதிக்கப்பட்டதுடன், பல ஆயிரக்கணக்கான வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்து பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூடி நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மக்கள் துன்பத்தில் மூழ்கியுள்ளனர்.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாமல் காற்று, தொடர் மழை, பலத்த கடல் சீற்றம் போன்ற இந்த மிக மோசமான அனர்த்தம் காரணமாக மிகவும் நொந்துபோயுள்ளனர்.

எனவே விவசாயிகள், மீனவர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் ஆகியோருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் கடந்த 1955 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர்.

பலத்த துன்பத்தை முல்லைத்தீவில் இருக்கும் இந்தப் பாலமும் அனுபவித்து வருகின்றது.

கடந்த 2009இறுதி யுத்தத்தின்போது பாரிய சேதங்களுக்கு உள்ளானது. அதற்கு முன்பும்சரி, பின்பும் சரி பாலத்தின் இரு ஓரங்களிலும் பாதுகாப்புக் கற்கள் கூட இல்லாமல் காணப்படுகின்றது.

மழைக்காலங்களில் நீரில் மூழ்கும் இந்தப் பாலத்தால் பயணிக்கும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அனுபவிக்கும் துன்பத்தை சொல்லில் வடிக்கமுடியாது. சுமார் 600 மீற்றர் தான் இந்தப் பாலத்தின் நீளம்.

தயவு செய்து நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் இந்த வட்டுவாகல் பாலத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு ஆதரவு தாருங்கள்.

அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் அதனை உள்வாங்குகள் என அவர் தெரிவித்தார். (நி-8-299)

## பார் அனுமதி குற்றச்சாட்டிற்கு வார இறுதியில் பதில்

### ரணில் தரப்பு அறிவிப்பு



(கொழும்பு)

கடந்த அரசாங்க காலத்தில் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கியமை தொடர்பில் எதிர்வரும் வார இறுதியில் நாட்டிற்கு விரிவான விளக்கத்தை முன்வைக்கவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த தேர்தல் காலத்தில் 361 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் அவைத்தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த விளக்கத்தை முன்வைக்கவுள்ளதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மதுபான உரிமம் வழங்கும் முறை குறித்து விரிவாக விளக்கவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்களின் பட்டியல் பிமல் ரத்நாயக்கவினால் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## அரசாங்க வேலை வாய்ப்பில் புறக்கணிக்கப்படும் மாற்றுத்திறனாளிகள்

### சுட்டிக்காட்டிய சுகத் வசந்த எம்.பி

(கொழும்பு)

மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் சொற் பிரயோகங்களை பாராளுமன்றில் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என இலங்கையின் முதல் மாற்றுத்திறனாளியான பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள 17 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் சார்பில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கவுள்ளேன்.

பலர் மாற்றுத்திறனாளிகள் பாராளுமன்றிற்கு வந்து என்ன செய்யப்போகின்றனர் என்று கேட்கின்றார்கள். அதனை சவாலாக ஏற்று எனது பணியை தொடர்வேன்.


மாற்றுத்திறனாளிகள் அரச வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்படுகின்றனர்.

வேலைவவாய்ப்பில் 3 சதவீத மாற்றுதிறனாளிகள் உள்வாங்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் ஐ.நாவில் புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான பொருட்களுக்கு வரிக் குறைப்பு வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

## அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்தார் டொனால்ட் லூ



(கொழும்பு)

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்புக் குறித்து தனது எக்ஸ் பக்கதில் பதிவிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்,

இலங்கையின் மீட்புக்கு முக்கிய பங்காற்றிய யுஎஸ் எய்ட் மற்றும் அமெரிக்க திறைசேரி திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்துடன் சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம். மேலும் இலங்கையின் மக்கள் நலனுக்காக பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை ஆதரிக்கத் தகுந்த திட்டங்கள் திறன் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் நாம் இணைந்து செயற்படக்கூடிய வழிகளை இதன் போது ஆராய்ந்தோம் என குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## பண்டிகைக் காலத்தில் விசேட சோதனை

### களமிறங்கும் 2000 உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் விசேட சோதனை நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் 2000 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சோதனைகளின் போது உணவகங்களில் உள்ள சமைத்த உணவுகளை பரிசோதிக்கும் பணியே பிரதானமாக இடம்பெறவுள்ளதாக அதன் செயலாளர் சமில் முதுகுடா குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையுடன் உணவு மற்றும் பானங்களின் தூய்மை தொடர்பில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக பல தொற்று நோய்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி-20 போட்டியில் 349 ஓட்டம் சாதனை படைத்த பரோடா அணி

இந்தியாவின் உள்நாட்டு ரி-20 போட்டியான சையத் முஷ்டாக் அலி டிராபியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் அன்று சிக்கிமுக்கு எதிராக பரோடா அணி 5 விக்கெட் இழப்புக்கு 349 ஓட்டங்களைக் குவித்தது.

இதனால் ஒட்டுமொத்த ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டம் குவித்த அணி என்ற சாதனையை பரோடா படைத்தது.

சிக்கிமுக்கு எதிராக இந்தூரில் உள்ள எமரால்டு உயர்நிலைப் பாடசாலை மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில்பரோடா அணியின் பானு பனியா 51 பந்தில் 15 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல்134 ஓட்டங்களை எடுத்தார்.

கடந்த மாதம் ஐ.சி.சி ஆடவர் ரி-20 உலகக் கோப்பை ஆபிரிக்கா துணை பிராந்திய தகுதிச் சுற்று குழு பி போட்டியில் சிம்பாப்வே ரி-20 போட்டியில் காம்பியாவுக்கு எதிராக 344/4 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்திருந்தது.

முன்னதாக 2023 ஆம் ஆண்டு நடந்த ரி-20 போட்டியில் மங்கோலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் நேபாளம் 314/3 ஓட்டங்களை பெற்றிருந்தது.


இந்த நிலையில் இந்த சாதனைகளைத் தற்சமயம் சையத் முஷ்டாக் அலி டிராபியில் பரோடா அணி முறியடித்துள்ளது.

அத்துடன் இந்த ஆட்டத்தில் பரோடா ஒரு இன்னிங்ஸில் 37 சிக்ஸர்களை அடித்து சாதனையையும் படைத்தது.

சையத் முஷ்டாக் அலி டிராபியில் மொத்தம் 300 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பதிவு செய்த முதல் அணியாக பரோடா பதிவாகியுள்ளது. (6-8)



# பாகிஸ்தான் நிபந்தனையை ஏற்க மறுக்கும் பி.சி.சி.ஐ




சம்பியன்ஸ் டிராபி தொடர் பான சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு இடையிலான பேச்சுவார்த்தை நீண்ட நாட்களாக தீர்வை எட்டாமல் இருக்கிறது.

சமீபத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இந்தியாவின் போட்டிகளை ஹைபிரீட் முறையில் நடத்த சில நிபந்தனைகளுடன் ஒப்புக் கொண்டு டுபாயில் நடத்த திட்டமிடுவதாக வெளியான செய்திகள் ஆறுதலாக அமைந்தாலும் அதிகாரபூர்வமாக எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

இந்தியா வருங்காலத்தில் பல ஐ.சி.சி தொடர்களை நடத்தவிருக்கிறது.

2025 ஆம் ஆண்டு மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை 2026ஆம் ஆண்டு இலங்கையுடன் இணைந்து ரி- 20 உலகக்கோப்பை, 2029 சம்பியன்ஸ் டிராபி மற்றும் 2031 ஒருநாள் உலகக் கோப்பை போன்ற தொடர்கள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் மற்றும் பி.சி.சி.ஐ என இரண்டு தரப்புக்கும் இணக்கமான முடிவை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சில நாட்களில் ஐ.சி.சி நிர்வாகத்தினர் சேர்ந்து பேசி முடிவெடுப்பர் எனக் கூறப்பட்டுள்ளது. (6-8)




### கஜன்




### சறோ




### உமா




### அஸ்விந்




### கௌசனா




### சிப்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

**Special Note: After processing the applications, appointments will be made in concurrence with UGC and the Treasury.**

**FACULTY OF MEDICINE**

**Senior Professor / Professor of** Anatomy/ Parasitology / Forensic Medicine/ Pharmacology

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in** Anatomy/ Biochemistry/ Community & Family Medicine/ Microbiology/ Parasitology/ Forensic Medicine/ Pharmacology/ Pathology / Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics/ Surgery/Medical Education/ Nuclear Medicine

**Note 1:**

- I. *Applications for the above posts will be entertained from the candidates with* ***MBBS degree*** *as their first degree*
- II. *Applications from candidates with BDS/BVSc degree can also be considered for the posts in Biochemistry, if there is no applicant with a MBBS degree*
- III. *For the Posts of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Un confirmed)/ Lecturer (Probationary), preference will be given to those who either have or are doing* ***the postgraduate degree as given below against the subject:***

| | |
|---|---|
| *i. Anatomy* | *a) MD/Ph.D/M.Phil/M.Sc in Anatomy*<br>*b) MD in Surgery/ Surgery with subspecialty/ Radiology/ Obstetrics & Gynaecolgy/ Genetics* |
| *ii. Biochemistry* | *a) MD/ in Medicine/Chemical Pathology*<br>*b) BDS/BVSc degree with Ph.D/M.Phil in Biochemistry* |
| *iii. Community & Family Medicine* | *a) MD in Community Medicine/Family Medicine / Medical Administration*<br>*b) Ph.D in Public Health* |
| *iv. Microbiology* | *a) MD in Medical Microbiology* |
| *v. Parasitology* | *a) MD in Parasitology* |
| *vi. Pharmacology* | *a) Ph.D/M.Phil in Pharmacology*<br>*b) MD in CPT (Clinical Pharmacology & Therapeutics)/Medicine/Paediatrics/Aneasthesiology* |
| *vii. Paediatrics* | *a) MD in Paediatrics* |
| *viii. Forensic Medicine* | *a) MD in Forensic Medicine* |
| *ix. Pathology* | *a) MD in Hematology* |
| *x. Obstetrics & Gynaecology* | *a) MD in Obstetrics & Gynaecology* |
| *xi. Psychiatry* | a) MD in Psychiatry |
| *xii. Surgery* | a) MD in Surgery |
| *xiii. Medical Education* | *a) MD in Medical Education* |
| *xiv. Nuclear Medicine* | *a) MD in Radiology* |

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details.

**Closing date:**

Applications should reach us on or before the date given below:

| | |
|---|---|
| **Post of Senior Professor/Professor** | - 10.01.2025 |
| **Other posts** | - 24.12.2024 |

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna Collection Account No: **970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self-evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www .jfn. ac.lk /index. php/ circular/) with a covering letter.

Perfected applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

(C-1735)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGISTRAR,UNIVERSITY OF JAFFNA,SRI LANKA. 06.12.2024**

# உச்சம் தொட்ட தேங்காய் விலை

(கொழும்பு)

தேங்காய் விலையை 220 முதல் 230 ரூபா வரையில் வர்த்தகர்கள் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தேங்காய் விலை உயர்வால், புத்தாண்டுக்கு பால்சோறு சமைப்பது கூட பிரச்சினையாகி விட்டதாகவும் பொது மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சில பகுதிகளில் தேங்காய் தட்டுப்பாடு நிலவுவதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர். (நி-8)

## கோபாகுழுவின்
# தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு

(கொழும்பு)

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம்.

அதேபோன்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோப் குழுவின் தலைவர் பதவி ஆளுங்கட்சிக்கு தேவை என்று கூறினோம்.

அந்த அரசின் அமைச்சர் ஒருவர் கோப் குழுவின் தலைவராக வருவதை நாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்தார். (நி-8)

# ‘குடிசை’ பட இயக்குநர் காலமானார்

(சென்னை)

இயக்குநர் ஜெயபாரதி நுரையீரல் தொற்று காரணமாகக் காலமானார்.

சென்னை- ஓமந்தூரார் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் காலமானார்.

கடந்த 1979ஆம் ஆண்டு வெளியான “குடிசை” திரைப்படத்தை இயக்கி பிரபலமானவர் ஜெயபாரதி.

இப்படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது மட்டுமில்லாமல் பல விருதுகளையும் வென்றது. இவரது இயக்கத்தில் “ஊமை ஜனங்கள்”, “ரெண்டும் ரெண்டும் அஞ்சு”, உச்சி வெயில”, “நண்பா நண்பா”, “குருஷேத்திரம்”, “புத்திரன” உள்ளிட்ட படங்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் அவரது மறைவுக்குத் திரை பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ( நி-8)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
07 மார்கழி 2024
“சுதந்திரம் என்பது ஆண்களுக்கு மட்டுமானது இல்லை பெண்களுக்கும் உரித்தானது.”
JSAC
16
2024
(சி-1733)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி வகை II இல் கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தி னால் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் கோரப்படும் பாடசாலை

| இல | வலயக்கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் | வகை - II |

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 23.12. 2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக்கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம்-2024" எனக் குறிப்பிடவும்.

வலய நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு தொடர்பாக வடமாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் கி.கமலராஜன் அறிவித்துள்ளார். (6-8)

# மாவைக்கந்தனின் பாலஸ்தாபன வைபவம்



(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலய பாலஸ்தாபன பாலய கும்பாபிஷேக வைபவக் கிரியைகள் நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

அடுத்த ஆண்டு (11.04.2025) பங்குனி உத்தர நன்னாளில் மஹாகும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# வீதியால் சென்ற பெண்களை அச்சுறுத்திய இருவர் மறியலில்

(கரணவாய்)

வீதியால் சென்ற பெண்களை கூரிய ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைதான இரு நபர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவான் பா.பாலசுப்பிரமணியம் நேற்று உத்தரவிட்டார்.

பருத்தித்துறை கோரியடி பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை வீதியால் சென்ற பெண்களை அச்சுறுத்தும் விதமாக கோஷ்டி ஒன்று ஈடுபட்டிருந்தது.

இது தொடர்பாக பருத்தித் துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய அங்கு சென்ற பொலிஸார் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை வைத்திருந்த இருவரை கைது செய்தனர்.

வீதியால் சென்ற பெண்களை அச்சுறுத்தியமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதவான் இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 20 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(6-8-60)

# யாழ்.பல்கலையில் சேர்.பொன்.இராமநாதனின் சிராத்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதனின் 94 ஆவது சிரார்த்த தின குரு பூசை தின நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வையொட்டி பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள சேர். பொன். இராமநாதன், ஆறுமுகநாவலர் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து தீபாராதனை இடம்பெற்றது.



தொடர்ந்து பல்கலைக்கழகப் பேரவை மண்டபத்தினுள் சிரார்த்த தின குருபூசை தின நிகழ்வு இடம்பெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடந்த இந் நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சைவ சமய அபிமானிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(6-8-33)

# ஆறுமுகநாவலரின் 145ஆவது நினைவுதினம் வவு. அனுஷ்டிப்பு



(குருமன்காடு)

ஆறுமுகநாவலரின் 145 ஆவது நினைவு தினம் வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவு சிலையடியில் நகரசபை செயலாளர் அ.பாலகிருபன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஆறுமுகநாவலரின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது அவர் தொடர்பான நினைவுரைகளை பாடசாலை மாணவர்கள் நிகழ்த்தியிருந்தனர்.

முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள், நகரசபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (6-8-250)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிதொடக்கம் 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் வழங்குவார். மேலதிக தொடர்புகளுக்கு 021222 2772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# Five-S திட்டத்திற்கமைய பளையில் பொலிஸ் நிலையம் திறப்பு



(தருமபுரம்)

Five-S திட்டத்திற்கமைய வடமாகாணத்தில் முதலாவது பொலிஸ் நிலையம் பளையில் திறந்து வைக்கப்பட்டது.

பொது மக்களுக்கு சிறந்த வினைத்திறனான சேவையினை வழங்கும் நோக்குடன் பொலிஸ் மா அதிபரின் எண்ணக்கருவுக்கமைய பொலிஸ் நிலையங்களை Five-s திட்டத்திற்கு கொண்டுவரும் ஒரு அங்கமாக வடமாகாணத்தில் முதலாவது பொலிஸ் நிலையமாக கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தினை வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சி.ஏ.தனபால நேற்று திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சமந்த டீ சில்வா, கிளிநொச்சி பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் உப்புல் செனவரத்ன, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பளை பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (6-8-316)

# கஞ்சா பீடியுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கஞ்சா பீடியுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் வைத்தே 28 வயதான இளைஞன் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ❖பயங்கரவாத தடைச்சட்டம்
# ❖நிறைவேற்றதிகார முறைமை
# நீக்குவது அவசியமானது
## சட்டத்தரணிகள் அமைப்பு வேண்டுகோள்

**(கொழும்பு) — தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கவேண்டும் என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை காரணமாக சாத்தியமாகியுள்ள ஏதேச்சதிகார ஆட்சியானது ஜனநாயக சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை உள்ளிட்ட நிறுவனங்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பை கேலிக்கூத்தாக்கியுள்ளது. மேலும் சட்டபூர்வமான கருத்து சுதந்திரத்தை நசுக்குவதற்கு தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தனிநபர்கள், குழுக்கள் நிறுவனங்களிற்கு எதிராக இதனை பயன்படுத்தியுள்ளனர்.

பிரஜைகளிற்கு சாதாரணமாக வழங்கப்படவேண்டிய மனித உரிமை பாதுகாப்புகளை முழுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கொடூரமான விதிமுறைகளிற்காக பெயர்போயுள்ளது இந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் கூட்டிணைவு, பயங்கரவாதம் பற்றிய தெளிவற்ற மற்றும் பரந்துபட்ட வரையறையின் அடிப்படையில் கைது செய்வதற்கான காவலில் வைப்பதற்கான அதிகாரங்களை வழங்குகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான அதிகாரங்கள் நீதி ஆய்விற்கு உட்படுத்தப்படுவதில்லை. மேலும் இது பரந்துபட்ட அசாதாரண ஜனாதிபதி அதிகாரங்களையும் வழங்குகின்றது எனத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் அமைப்பு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது மனித உரிமைகளிற்கு மாத்திரமின்றி நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கும் அவசியமானது என தெரிவித்துள்ளது. (நி-8)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(595)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**



**யாழ்ப்பாணம் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கூட்டுறவுச் சங்கம்**
**(வரையறுக்கப்பட்டது)**

**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கௌரவிப்பு நிகழ்வும் - 2025**

| | |
|---|---|
| இடம் | :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் |
| காலம் | :- 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி |
| தலைமை | :- திரு.செ.ஜெயக்குமார் அவர்கள் (தலைவர், யா.மா.பா.உ..கூ.சங்கம்) |

**குறிப்பு:**

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 19.01.2025 அன்று நடாத்த தீர்மானித்திருப்பதால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 27.12.2024 ஆம் திகதிக்கு முன்னதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பி வைக்கவும். அத்துடன் அங்கத்தவர் பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை சித்தி பெற்றிருப்பின் அவற்றின் விபரங்களினை சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

(சி-1734)

**(க.செல்வச்சந்திரன்)**
**செயலாளர்.**

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**



**மணிவிழா நாயகியை**
**மனதார வாழ்த்துகின்றோம்**



**திருமதி.**
**சாந்தினி குகநாதன்**
**(SLTS-I)**

**சேவைக்காலம்** (34 வருடங்கள்)

1. கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம் (16.03.1990-10.01.2001)
2. கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் (11.01.2001-14.05.2001)
3. கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம் (15.05.2001-31.07.2004)
4. கிளி/மாயவனூர் வித்தியாலயம் (01.08.2004-24.10.2009)
5. யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் (27.10.2009-16.09.2010)
6. கிளி/மாயவனூர் வித்தியாலயம் (17.09.2010-02.01.2011)
7. யா/ கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் (03.01.2011-06.12.2024

ஆசிரியர் பணி
அறப்பணி மட்டுமல்ல
அறிவூட்டும் பணி
அத்தகைய பணியினை ஆற்றி
இன்று அகவை அறுபதில் பணி நிறைவெய்தும்
எம் ஆசிரியரை மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
(2690) **யா/கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயம்**



**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 69<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc, Civil Engineer<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14968 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HND IT, B.Com, Bsc, Banker<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், தனியார் பட்டதாரி<br>தொ.இ: G/10870 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>7 இல் செவ்<br>கி.பா:11 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L, Swiss.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14969 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13551 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: IT Administrator (PVT)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14970 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு:அரச வேலை, வெளிநாடு-(லண்டன், கனடா)<br>தொ.இ: G/13037 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாரதம்

# பாராளுமன்றத்தை நோக்கி பேரணியாக செல்லும் விவசாயிகள்

## டில்லியில் குவிக்கப்பட்ட பொலிஸார்

**(டில்லி)**

**பாராளுமன்றம் நோக்கி விவசாயிகள் பேரணி செல்ல இருப்பதாக வெளியான அறிவிப்பைத் தொடர்ந்து டில்லி - ஹரியானா எல்லை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.**



வேளாண் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 'டில்லிக்கு செல்வோம்' போராட்டத்தை பஞ்சாப் விவசாயிகள் நேற்று தொடங்கியுள்ளனர்.

சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா ஆகிய சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

இவர்கள் ட்ரக்டர்களில் டில்லியில் உள்ள பாராளுமன்றத்தை நோக்கி பேரணி செல்கின் றனர்.

இதற்காக பஞ்சாப் - ஹரியானா இடையே அமைந்திருக்கும் ஷம்பு எல்லையில் விவசாயிகள் குவிந்தனர்.

விவசாயிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அதே போல நொய்டாவைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கடுமையான தடுப்பு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

டில்லிக்குள் நுழைவதற்கு முன்பாகவே விவசாயிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் ஒவ்வொரு கிராமத்திலும் 10 இற்கும் மேற்பட்ட பொலிஸார் காவல் பணியில் ஈடுபட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (நி-8)

# மூன்றாவது அணுயுகம் விளிம்பில் உலகம்!

## எச்சரிக்கும் பிரித்தானிய இராணுவம்



(லண்டன்)

உலகம் மூன்றாவது அணு யுகத்தின் விளிம்பில் இருப்பதாக பிரித்தானிய இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானியா மற்றும் அதன் மேற்கு நட்பு நாடுகள் புதிய அணு ஆயுத மிரட்டல்களை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று பிரித்தானிய ஆயுதப் படைகள் தலைவர் அட்மிரல் சர் டோனி ராடகின் எச்சரித்துள்ளார்.

லண்டனில் உள்ள Royal United Services Institute (RUSI) பாதுகாப்பு ஆய்வு மையத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், உலகம் தற்போது மூன்றாவது அணு யுகத்தின் விளிம்பில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

பனிப்போரின் காலத்தில் அணு சக்தியின் முதல் யுகம் தொடங்கியதாகவும், அதன் பிறகு ஆயுதக் குறைப்பு முயற்சிகளுடன் இரண்டாவது யுகம் கடந்ததாகவும் இப்போது உலகம் மூன்றாவது அணு யுகத்திற்குள் நுழைந்திருப்பதாகவும், அதில் அணு சக்தி அச்சுறுத்தல்கள் மற்றும் பயிற்சிகள் மீண்டும் பரவலாகி வருகின்றன என்று அவர் தெரிவித்தார். மேலும் அவர், இந்த யுகத் தில், ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளின் செயற்பாடுகள் அதிகரித்து வரு கின்றன. குறிப்பாக, ரஷ்யாவின் அணு ஆயுதங்களின் பயிற்சிகள், NATO நாடுகளுக்கு நெருக்கடியை கொடுத்துள்ளன.

அத்துடன், பல நாடுகள் தங்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் அதிகப்படுத்துவதற்காகவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்பந்த நிலைமை உருவாகியுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# விண்ணில் பாய்ந்த இந்திய ராக்கெட்



(டில்லி)

ஐரோப்பிய விண்வெளி முவர் நிலையத்தின் இரு செயற்கைக் கோள்களை சுமந்து செல்லும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெற்றிகரமாக விண்நோக்கி ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் அமை ந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி59 மற்றும் ப்ரோபா-3 என்ற செயற்கைக்கோள்களுடன் ராக்கெட் நேற்று மாலை 4:04 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் - நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம் இடையே அண்மையில்

இது ஸின் வான அல்- அறிக் வெளி தேச வெளி இது கையி விக்க "இஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவில் கால் வைத்தால் பணயக்கைதிகளை கொல்வோம்!

## இஸ்ரேலை மிரட்டும் ஹமாஸ்



(காசா)

**தங்களிடம் உள்ள பணயக் கைதிகளை மீட்க இஸ்ரேல் முயன்றால் நொடியும் யோசிக்காமல் அவர்களைக் கொன்று விடுவோம் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது குறித்து ஹமாஸின் இராணுவ பிரிவான இஸ் எல்-தீன் அல்-கஸ்ஸாம் படை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இஸ்ரேல் பணயக் கைதிகளைக் கொன்றால் என்னவாகும் என்ற விளைவுகள் குறித்து கருத்தில் கொள்ள வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இஸ்ரேல் மீட்பு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே தாக்குதல் நடத்தப்படும் எனவும் அதற்கு இஸ்ரேல்தான் பொறுப்பாகும்.

மத்திய கிழக்கில் ஓராண்டிற்கு மேலாக மோதல் போக்கு நிலவி வருகின்ற நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே இதுபோல எந்தவொரு அமைதி ஒப்பந்தமும் ஏற்படவில்லை.

இதனால் இரு தரப்பிற்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கே நிலவி வருகின்ற நிலையில் ஹமாஸ் தலைவர் சின்வார் கொல்லப்பட்ட போதிலும் ஹமாஸை குறிவைத்து இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் காசாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீனர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சூழலில் இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் படை தற்போது குறித்த அறிக்கையின் மூலம் பகீர் மிரட்டலை விடுத்துள்ளது.

இதேநேரம் குறித்த அறிக்கைகைக்கு இஸ்ரேல் தரப்பில் இதுவரை எந்தவொரு பதிலும் இன்னும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



மேற்கொள்ளப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் பின்னர் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

சூரியனின் வெளிப்புற வளிமண்டலமான கொரோனாவை பற்றிய துல்லிய ஆய்வுக்காக இந்த செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன.

இதற்காக ஏவப்படும் இரண்டு செயற்கைக் கோள்களின் மூலம் ஓர் ஆண்டில் 50 முறை செயற்கையாக சூரிய கிரகணத்தை உருவாக்கி, இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். அத்தகைய ஆய்வுகள் ஒவ்வொன்றும் ஆறு மணி நேரத்திற்கு நீடிக்கும்.

இதன்மூலம், நெருங்கவே முடியாத, அவ்வளவு எளிதில் ஆராய முடியாத சூரியனின் மேற்பரப்பில் இருக்கும் கொரோனா என்ற படலத்தை விஞ்ஞானிகள் ஆய்வு செய்யவுள்ளனர். (நி-8)

### தேசத்துரோக குற்றச்சாட்டு
## தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிராக விசாரணை



(சியோல்)

தென் கொரியாவில் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தும் முயற்சியில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு எதிரான "தேசத்துரோக" குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணையை அந்நாட்டு பொலிஸார் நேற்று முன்தினம் ஆரம்பித்தனர்.

தென் கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனத்தின் தகவல்களுக்கு அமைவாக குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதியிடம் விசாரணை மேற்கொள்ள தேசிய பொலிஸார் முகவர் நிலையத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இராஜினாமா செய்த பாதுகாப்பு அமைச்சர் கிம் யோங்-ஹியூன், இராணுவத் தளபதி ஜெனரல் பார்க் அன்-சு மற்றும் உள்துறை அமைச்சர் லீ சாங்-மின் ஆகியோர் மீதும் தேசத்துரோகம் மற்றும் பிற தொடர்புடைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தென் கொரியாவின் தேசிய சட்டமன்றம் ஜனாதிபதி யூன் சுக் யோலின் இராணுவச் சட்ட மூலத்தை தீர்மானமாக இரத்து செய்ததை அடுத்து, நாடு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஒரு வியத்தகு அரசியல் எழுச்சியைக் கண்டது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தென் கொரியாவின் முதல் இராணுவச் சட்டத்தை திணிக்க யூனின் அதிர்ச்சி முயற்சி, அதன் நவீன ஜனநாயக வரலாற்றில் நாட்டை அதன் ஆழ்ந்த கொந்தளிப்பில் ஆழ்த்தியது.

இது நாடு முழுவதும் பரவலான கோபம் மற்றும் எதிர்ப்புக்களைத் தூண்டியதுடன், ஆசியாவின் நான்காவது பெரிய பொருளாதாரத்தில் பல தசாப்தங்களில் மிகப்பெரிய அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

இதன் பின்னணியில், யூனுக்கு எதிரான முறைப்பாடுகள் அரசுத் தரப்பிலும் உயர் அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.


அவரது தோல்வியுற்ற இராணுவச் சட்ட நடவடிக்கையை அடுத்து, ஜனநாயகக் கட்சியின் தலைமையிலான ஆறு எதிர்க்கட்சிகள் யூன் மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிம் ஆகியோருக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானத்தை தாக்கல் செய்தனர்.

பாதுகாப்பு அமைச்சர் கிம் இராஜினாமா செய்ததையடுத்து அவர் தனது பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், யூனுக்கு எதிரான பதவி நீக்க வாக்கெடுப்பு இன்று சனிக்கிழமை நடைபெற உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப் குழுவில் சிறிய கட்சிகளும் இடம் பெற வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி



(கொழும்பு)

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்தார்.

நேற்றையபாராளுமன்ற அமர்வில் அவர் மேலும் குறிப்பிடுகையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்ட கட்சியாக எங்களுடைய கட்சி காணப்படுகிறது.

பாராளுமன்றின் பணிகள் என்னவென்று ஒரு உறுப்பினரைக் கொண்ட கட்சியாகிய எங்களுக்கு தெரியவேண்டும்.

எனவே பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் நீங்கள் நெகிழ்வுத்தன்மையைக் கடைப்பிடித்து எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இன்றைய பாராளுமன்றத்தில் காணப்படுகின்ற நிலைமையை கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஆகவே பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

முன்னைய அரசாங்கத்தில் எமக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. நாங்கள் பேசியிருந்தோம் என அவர் தெரிவித்தார். (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 350 | 450 | 450-500 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 700 | 750-800 | 800 |
| தக்காளி | 350 | 350 | 300 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 150 | 160 |
| கோவா | 200 | 200 | 200 | 250 | 300 |
| கரட் | 250 | 250 | 200 | 200 | 300 |
| பூசணி | 140 | 150 | 150 | 120 | 200 |
| புடோல் | 240 | 260 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 50-70 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 380 | 350 | 350 | 380 | 320 |
| பாகற்காய் | 1200 | 2000 | 1000 | 650 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 200 | 130 | 200 |
| பயற்றங்காய் | 550 | 500 | 600 | 600-700 | 600 |
| லீக்ஸ் | 300 | 360 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 380 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 500 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 850 | 800 | 1000 | -- | 1000 |
| போஞ்சி | 600 | 800 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 160 | 150 | 200 | 150 | 200 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 150 | 80-140 | 150-200 |
| இராசவள்ளி | -- | 800 | 1200 | 660 | 1200 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 200 | 200 | 100 | 280 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 100 | [illegible] | 100 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 | [illegible] | [illegible] |

# இன்று ஒரு தகவல் 278



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மௌனம்

இந்தக் காலத்துப்பிள்ளை ஒருவன் தன்னுடைய அப்பாவைப் பார்த்துச் சொன்னான், அப்பா நான் உனக்கு உதவி செய்யலாம் என்று நினைக்கின்றேன். என்ன உதவி செய்யவேண்டும் என்றான். நீ சும்மா இருந்தால் அதுவே எனக்கு செய்கின்ற பெரிய உதவியடா! என்றார் அப்பா.

சும்மா இருப்பதும் ஒரு உதவி தான். அது மாதிரி மௌனமும் ஒரு சமூக சேவைதான் என்கின்றார் காஞ்சிப்பெரியார். நமக்கு ஐந்து புலன்கள் இருக்கிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி. அந்த ஐந்திலேயும் அதிகமாக வேலை செய்வது எது என்று நினைக்கின்றீர்கள். வாய் தான். ஏன் என்றால் அதற்கு இரண்டு வேலை.

கண்ணிற்குப் பார்ப்பது மட்டும் தான் வேலை. காதிற்கு கேட்பது மட்டும் தான் வேலை. மூக்கிற்கு வாசனையை அறிவது மட்டும் தான் வேலை. ஆனால் வாய் அப்படி இல்லை. அதற்கு இரண்டு வேலை. சாப்பிடுகின்றதும் அது தான். பேசுவதும் அது தான்.

அதாவது வாய் ஒன்று தான் கர்மேந்திரியமாகவும் இருக்கிறது. ஞானேந்திரியமாகவும் இருக்கிறது. சாப்பாட்டிலே உட்கார்ந்தால் எந்தெந்த ஆகாரம் என்னென்ன ருசி என்று அறிவிக்கின்ற வேலையையும் செய்கின்றது.

சபையிலே உட்கார்ந்தால் பாடுவது, பேசுவது, சிரிக்கின்றது இவை மாதிரி வேலைகளையும் செய்கின்றது. இன்னொரு வித்தியாசம். கண், காது மூக்கு எல்லாம் உடலை வருத்திக் கொண்டு வேலை செய்வதில்லை.

ஒரு ரோஜாப்பூவைப் பார்த்தால் உடனே மூக்கு அப்படியும் இப்படியும் அசைய ஆரம்பிப்பதில்லை. ஒரு சங்கீதத்தைக் கேட்டவுடனே காது ஆட ஆரம்பிக்காது. ஆனால் வாய் அப்படி இல்லை. அது பேசினாலும் சரி சாப்பிட்டாலும் சரி அசைந்து தான் ஆக வேண்டும்.

ஆகவே மற்றவற்றை விட வாய்க்கு வேலை அதிகம் என்று தெரிகின்றது. சாப்பிடுவது, பேசுவது என்று இரண்டு காரியம் அதற்கு. இப்படி இரண்டு காரியம் இருப்பதனாலே இது இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது கடவுளினுடைய அபிப்பிராயமாக இருக்கின்றது என்கின்றார் காஞ்சிப் பெரியவர்.

ஆனால் இப்போது நாம் அப்படியா நடந்து கொள்கின்றோம். அதற்கு நேர்மாறாக நடந்து கொள்கின்றோம். நாம் சாப்பிடுவதும் அதிகம். பேசுவதும் அதிகம். இரண்டு வேலையையும் தேவைக்கு அதிகமாகவே செய்கின்றோம். வாய் தான் மிகவும் அதிகமாக வேலை செய்கின்றது. அதற்கு ஓய்வு கொடுத்தால் உடம்பு நன்றாக இருக்கும். உலகமும் நன்றாக இருக்கும்.

மௌனவிரதம் இருப்பது எல்லாம் எதற்காக? என்று நினைக்கின்றீர்கள் இதற்குத் தான். இந்தக் காலத்திலே மௌனமாக இருப்பவர்கள் எல்லாம் மகத்தான தொண்டு செய்கின்றார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

சத்தம் அதிகமாகப் போய்த்தான் ஒலி மாசுபாடு வருகின்றது. அதுமட்டும் இல்லை. மௌனமாக இருந்தால் சண்டை சச்சரவே வராது. ஆக இதுவும் ஒரு சமூக சேவைதான். நமக்கு வாய் இருக்கிறது என்பதற்காக அதிகம் சாப்பிடுவதும் தவறு. வள வள என்று பேசுவதும் தவறு.

ஒரு கருத்தை சொல்லுவதற்கு ஒரு சொல் போதும் என்று இருக்கின்ற போது இரண்டு சொற்களை செலவு செய்யாதே. எவ்வளவு சொன்னாலும் அதனால் எந்த ஒரு பயனும் விளையாது என்று தெரியவருமேயானால் அந்த ஒரு சொல்லையும் விரயம் செய்யாதே என்கின்றார் சிங்சௌங் என்கின்ற அறிஞர்.

எல்லாக் குணங்களிலேயும் மௌனம் தான் சிறந்தது என்கின்றார் ஜீனோ. மௌனமாக இருப்பதன் மூலம் மற்றவர்கள் குறைகளை நம்மாலே தெரிந்து கொள்ள முடியும். அதே சமயத்திலே எங்களிடம் இருக்கின்ற குறைகளை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைத்து வைத்துக் கொள்ளவும் முடியும் என்கின்றார் அவர். அது உண்மை தானே. ஒரு பெரிய மேடைப் பேச்சாளர். 25 வருடம் பொது வாழ்விலே ஈடுபட்டிருக்கின்றவர்.

அவர் மனைவி ஒரு நாள் சொன்னார். என்வீட்டுக்காரர் 25 வருட காலமாக பொது வாழ்விலே ஈடுபட்டிருந்தால் கூட இந்த மாதம் 10 ஆம் திகதியிலிருந்து தான் மக்களுக்கு சேவை செய்ய ஆரம்பித்திருக்கிறார் என்றார், மிகவும் பெருமையாக.10 ஆம் திகதி அப்படி என்ன விசேஷம்? என்று கேட்டேன். அன்றிலிருந்து அவர் மேடையிலே பேசுவதை நிறுத்தினார் என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரை சந்தித்த வவு.பல்கலைக்கழக குழுவினர்




(வவுனியா)

வவுனியா பல்கலைக்கழகம் எதிர்கொள்ளும் சில சவால்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை பல்கலைக் கழக துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர் விடுதி மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான தங்குமிடம் தொடர்பில் ஆராயப்பட்டது. இவற்றை அமைப்பதற்கான காணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் பல்கலைக்கழகத்துக்கான புதிய கட்டடங்களை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு கொடையாளிகளின் உதவியைப் பெற்றுத்தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் தமது பல்கலைக் கழகத்தின் புதிய பீடத்தை ஆரம்பிப்பதற்கான திட்ட முன் மாழிவு தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவின் உதவிப் பதிவாளர் திருமதி.தவகிருபா பிரணவமலர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (6-8)

# வவுனியாவில் பனிமூட்டம்

## வீதிகளில் பயணிப்போர் சிரமம்



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று அதிகாலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டமையினால் வாகன சாரதிகள் போக்குவரத்து செய்வதில் பாரிய சிரமத்தை எதிர்கொண்டனர்.

கடந்த நாட்களில் கடும் மழை பொழிந்ததன் பின்னர் நேற்று முன்தினம் காலை அதிகளவான பனிமூட்டம் காணப்பட்டதோடு நேற்றும் பனிமூட்டமான நிலை காணப்பட்டது.

இதனால் அனைத்து பிரதேசங்களும் வெண்மையாக காட்சி அளித்தது.

இதன்போது வீதி போக்குவரத்தில் ஈடுபட்ட சாரதிகள் கடும் சிரமத்தை எதிர்கொண்டதோடு மின் குமிழ்களை ஒளிர விட்டு வாகனங்களில் பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற தொழிற்சந்தை நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பழைய மாவட்டச் செயலக வளாகத்தில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர்.க.பகீரதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தொழிற்சந்தை நிகழ்வினை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

குறித்த தொழிற் சந்தையில் 40 இற்கும் மேற்பட்ட அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களும் கலந்துகொண்டு இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் தொடர்பிலான ஆலோசனைகளையும் வழங்கி இருந்தனர்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிற் பயிற்சி பெறுநர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (6-8-316)



# கைதான 14 மீனவர்கள் மறியலில் வைக்க உத்தரவு

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 14 இராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இவ்வாறு கைதான 14 இந்திய மீனவர்களும் இழுவைப் படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 14 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (6-8-285)

# இராசிபலன்

07.12.2024
கார்த்திகை 22, சனிக்கிழமை
சஷ்டி முற்பகல் 9.51 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 3.56 மணிவரை
சுபநேரம் -3.17-4.47 மணிவரை
இராகுகாலம் 9.17-10.47 மணிவரை

சந்திராஷ்டமம் - புனர்பூசம்,பூசம்.

வளவன்




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகளை நிவர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.




நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்,பணவரவு திருப்தி தரும், பொது வாழ்வில் புகழ்கூடும், வாக்கு மேன்மையுண்டு,குடும்பத்தில் சுகங்களும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், சொன்ன சொற்களைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்.




பால்ய நண்பர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.




மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.




மறைமுகப் போட்டிகள் மாறும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், ஐஸ்வர்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




நேற்றைய பிரச்சினை யொன்று நல்ல முடிவுக்கு வரலாம், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

ஆசை, அச்சம், மயக்கம் அனைத்திலிருந்தும் விடுதலை பெற வைப்பதே தியானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 650





அதெல்லாம் போகட்டும் சோதிடரே! இராஜ குலத்தாரின் விடயம் நமக்கு என்னத்திற்கு? நான் இப்போது மேற்கொண்டு போகும் காரியம் எப்படி முடியும் சொல்லுங்கள்!

முன்னே உனக்குச் சொன்னதைத்தான் இப்போதும் சொல்ல வேண்டியிருக்கிறது அப்பனே! எத்தனையோ விபத்துக்கள் உனக்கு வரும் அவற்றையெல்லாம் வெற்றி கொள்வதற்கு எதிர்பாராத உதவி கிடைக்கும்!" என்றார் சோதிடர்.

இப்போது வாசலில் வந்து கொண்டிருப்பது விபத்தா, உதவியா என்று வந்தியத்தேவன் எண்ணமிட்டான். ஏனெனில் அச்சமயம் வாசலில் ஆடவர்களின் குரல்களுடன், பெண்களின் குரல்களும் கேட்டன. இருவரும் வாசற்புறத்தை நோக்கினார்கள்.

மறுநிமிடம் வானதி தேவியும் அவளுடைய பாங்கியும் உள்ளே வந்தார்கள்.

வந்தியத்தேவன் எழுந்து நின்று மரியாதையுடன் தேவி! மன்னிக்க வேண்டும்! தாங்கள் இங்கே வரப் போகிறீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் வந்திருக்கமாட்டேன்! என்றான்.

## 33 ஆம் அத்தியாயம்
## வானதி கேட்ட உதவி

"ஐயா என்னிடம் ஏன் அவ்வளவு கோபம்? தங்களுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?" என்ற கொடும்பாளூர் இளவரசியின் தீனமான குரல் வந்தியத்தேவனை உருக்கி விட்டது. இந்தப் பெண்ணிடம்தான் உண்மையில் எதற்காகக் கோபம் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

பூங்குழலி ஒரு கணம் அவன் மனக்கண் முன் வந்து மறைந்தாள். அவளுக்காக இந்தப்பெண்ணிடம் கோபங் கொள்ளுவது என்ன நியாயம்?

"அம்மணி! மன்னிக்க வேண்டும். அந்தமாதிரி ஒன்றும் நான் சொல்லவில்லை. தாங்கள் சோதிடரைப் பார்த்துவிட்டுப் போகும் வரையில் நான் வெளியில் காத்திருப்பேன் என்றுதான் சொன்னேன். எனக்கு ஒன்றும் அவசரமில்லை. இப்போதுகூட"

தாங்கள் வெளியேற வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. தங்களுக்கு அவசரமில்லை என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையில் நான் இங்கே சோதிடரைப் பார்க்க வரவில்லை. இவருடைய சோதிடத்தில் எனக்குக் கொஞ்சங்கூட நம்பிக்கை இல்லாமற்போய் விட்டது"

"தேவி! தங்கள் சித்தம் என் பாக்கியம்! ஒரு காலத்தில் என் சோதிடம் பொய்யாகவில்லை என்பதை தாங்களே உணர்வீர்கள். உணர்ந்து, இந்த ஏழையைப் பாராட்டுவீர்கள்!" என்றார் சோதிடர்.

அப்போது பார்த்துக் கொள்ளலாம்!" என்று வானதி கூறிவிட்டு வந்தியத்தேவனைப் பார்த்து, "ஐயா! நான் தங்களைப் பார்க்கத்தான் இங்கே வந்தேன். வழியில் தாங்கள் குதிரை மீது சென்றதைப் பார்த்தேன்.

நின்று விசாரிப்பீர்கள் என்று நினைத்தேன். பாராமுகமாகப் போய் விட்டீர்கள்! அதைப் பற்றி நான் அதிகமாக ஆச்சரியப் படவில்லை. இந்த அநாதைப் பெண்ணிடம் அவ்வளவு அக்கறை எதற்காக இருக்க வேண்டும்?" என்றாள்.


வந்தியத்தேவனுடைய கண்ணில் கண்ணீர் வந்துவிடும் போலிருந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

# புலியும் மருத்துவனும்



காட்டில் இருந்த ஒரு புலிக்கு வயிற்றில் நோய் கண்டிருந்தது. அது பொல்லாத நச்சு நோய். அந்த நோய் ஏற்பட்டிருந்ததால் அதனால் எவ்விதமான உணவும் உட்கொள்ள முடியவில்லை.

நாளுக்கு நாள் மெலிந்து வந்தது. அப்படியே வளர்ந்து வந்தால், தான் இறந்துபோக நேரிடுமென்ற அச்சம் புலிக்கு உண்டாகியது.

தன் நோயை எவ்வாறு தீர்ப்பது என்று புலி சிந்தனை செய்து கொண்டிருந்தது. அப்போது அவ்வழியாக ஒரு நரி வந்தது. புலி அதனிடம் தன் நோயைத் தீர்க்க ஒரு வழி கூறுமபடி கேட்டது.

பக்கத்து ஊரில் ஒரு மருத்துவன் இருக்கிறான். அவன் இது போன்ற நச்சு நோய்களைத் தீர்ப்பதில் வல்லவன். அவனைப் போய்ப் பார் என்று கூறி விட்டு நரி தன் வழியில் சென்றது.

புலி மெல்ல மெல்ல நடந்து மருத்துவன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தது.

அந்த நச்சு மருத்துவன் புலியின் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கினான். அதற்குத் தகுந்த மருந்து கொடுத்து நோயைக் குணப்படுத்தினான்.

நோய் தீர்ந்தவுடன் புலிக்குப் பசியெடுத்தது. அத்தனை நாட்களாக ஒன்றும் தின்னாமல் இருந்த தால் பசி அதிகமாயிருந்தது. உடனடியாக ஏதாவது தின்ன வேண்டும் போலிருந்தது.

தன் நோயைத் தீர்த்தவன் என்று சிறிதுகூட எண்ணிப் பாராமல் புலி மருத்துவன்மீது பாய்ந்தது. அவனை அறைந்து கொன்று உடலைக் கிழித்துத் தின்றது.

நன்றிக் குணம் இல்லாத கொடிய புலிக்கு உதவி செய்த மருத்துவன் அதற்கே இரையானான்.

கருத்துரை :- கொடிய புலிக்கு உதவிய மருத்துவன் அதற்கே இரையானான் நல்லறிவில்லாத தீயவர்களுக்குச் செய்யும் உதவிகளும் இது போலத் தீமையாகவே முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வை புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## களவை ஒழிக்காதவரை நாடு உருப்படமாட்டாது

நாட்டுக்கு வாருங்கள். முதலீடுகளைச் செய்யுங்கள். அரசியல் அழுத்தம் உங்களுக்கு இருக்காது என்றெல்லாம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க புலம்பெயர்ந்துள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தனித்து அரசியல் அழுத்தங்கள் மட்டுமே இலங்கையில் முதலிடாமைக்குக் காரணம் என்று கருதப்படுமாயின், அது மிகப்பெரும் தவறு.

இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் முதலீடுகளைச் செய்வதற்கு நம் புலம்பெயர் தமிழர்கள் தயங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது களவு.

ஆம், வெளிநாட்டில் இருக்கக்கூடிய நம்மவர்கள் நம் பிரதேசத்தில் ஏக்கர் கணக்கில் காணிகளைக் கொள்வனவு செய்து அதில் தென்னைகள் நட்டு தென்னந்தோட்டங்களை உருவாக்கினர்.

இதற்காக அவர்கள் ஏகப்பட்ட நிதியை முதலீடு செய்ததுடன் கணிசமானோருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கினர்.

எனினும் தென்னை மரங்கள் வளர்ந்து பயன்தருகின்றபோது **களவு** எனும் கொடுமை தோட்ட உரிமையாளர்களைக் கடுமையாகப் பாதித்தது.

ஆம், தமது சொந்தக் காணியில் தேங்காய் பறிப்பது போல கள்வர்கள் தென்னந் தோட்டங்களில் இறங்கி தேங்காய்களைத் திருடிச் செல்கின்றனர்.

இந்தக் களவு ஒரு பெரும் தொழில் முயற்சி போல போட்டி போட்டு நடக்கிறது.

அதே நேரம் இது விடயத்தில் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதனால் கடும் பாதிப்புக்கு ஆளான தோட்ட உரிமையாளர்கள் தென்னந்தோட்டங்களை விற்பனை செய்கின்ற பரிதாப நிலைக்கு வந்துள்ளனர்.

ஆக, களவு எனும் கொடுமையைப் பொலிஸார் கட்டுப்படுத்தாவிட்டால் – களவு எடுப்பவர்களை உரியமுறையில் தண்டிக்காவிட்டால் எங்கள் மண்ணில் எந்த முதலீட்டு முயற்சிகளும் இடம்பெறமாட்டாது.

எனவே நாடு முன்னேற வேண்டுமாயின் – விவசாய உற்பத்திகள் பெருக வேண்டுமாயின் முதலில் களவு இல்லாத தேசத்தை நாம் உருவாக்க வேண்டும்.

இதைவிடுத்து வீடு எரிக்கிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கின்ற மந்திரிபோல பொலிஸார் இருந்தால், இந்த நாடு உருப்பட்ட மாதிரித்தான்.

எனவே ஒட்டுமொத்தக் களவையும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் பொலிஸாரும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உதாரணத்துக்கு பொலிஸாரும் தென்னைப் பயிர்ச்செய்கை சபையும் சேர்ந்து தென்னந்தோட்டங்களில் நடக்கின்ற களவைக் கட்டுப்படுத்துவதற்கான உபாயங்களை உருவாக்க வேண்டும்.

இதற்கும் மேலாக, ஊர்கள் தோறும் கமக்காரர் அமைப்புகளை இயங்குநிலைக்குக் கொண்டு வந்து, அவர்களின் ஒத்துழைப்புடன் அந்தந்தப் பிரதேசங்களில் நடக்கின்ற களவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதைச் செய்யாமல் விடும்போது, தென்னந்தோட்ட உரிமையாளர்கள் பெரு நட்டத்தை அனுபவித்து அந்த முயற்சியிலிருந்து வெளியேறுவர்.

# இனவாதத்தை குறிப்பிட்டு மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்க வேண்டாம்

## சபையில் சானக்க சம்பத் எம்.பி

(கொழும்பு)

இனவாதத்தை குறிப்பிட்டு மீண்டும் ஒரு பயங்கரவாதத்தை கட்டியெழுப்ப வேண்டாம். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சானக்க சம்பத் தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

75 வருடங்களாக இந்த நாடு சாதாரணமாகச் செல்லவில்லை. லஞ்சம், ஊழல் போன்ற செயல்களால் நிறைந்து இருந்தது.

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிற்பாடு கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. இதனால் நாடு பின்னோக்கிச் செல்லப்பட்டது.

கறுப்பு ஜீலை வந்தது. இதனால் தமிழ் கட்சிகள் பின்னோக்கிச் சென்றார்கள். 30 வருடகால சாபக்கேடான யுத்தம் இந்த நாட்டை மேலும் பின்னோக்கிச் செல்ல வைத்தது.

சுனாமி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா மற்றும் நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தொழிற்சங்க போராட்டங்கள் போன்ற கசப்பான சம்பவங்கள் நாட்டை பின்னோக்கித் தள்ளியது. இதுவே நாட்டிற்கு சாபக்கேடாக அமைந்தது.

88-89 களில் இளைஞர் கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கிளர்ச்சிகளினால் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்புக்கள் சொல்லிவிட முடியாது. இச் சாபக் கேட்டிலிருந்து நாட்டை மீட்டு, மீண்டும் கட்டியெழுப்பும் தருணத்தில் அதற்கு நாம் முன் வருகின்றோம்.

இனவாதத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த நாட்டில் பல சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இனவாதத்தை குறிப்பிட்டு மீண்டும் ஒரு பயங்கரவாதத்தை கட்டியெழுப்ப வேண்டாம். அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

மனிதன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வான். ஆனால் அதிகாரம் மனிதனை துஷ்பிரயோகம் செய்யாது. ஆகவே நாட்டை முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தார். (ம-7)

# கடன் மறுசீரமைப்பு செயல்முறை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது

## அமைச்சர் ஜயந்த பெர்ணான்டோ

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு செயல்முறை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும், அதனை டிசம்பர் 31ஆம் திகதி அளவில் முடிவுறுத்துவதற்கு முயற்சிப்பதாகவும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரும் தொழில் அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்ணான்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இடைக்கால கணக்கு அறிக்கைக்கான யோசனைகளை அங்கீகரித்தல் தொடர்பான விவாதத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் இதனை வெளியிட்டார்.

கடன் மறுசீரமைப்பு செயல்முறை தாமதமடைவதனால் மாத்திரம் மேலதிக பற்றாக்குறை வட்டியாக 1.7 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியேற்படும் என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய பிரதி அமைச்சர்,

தாங்கிக் கொள்ள முடியாத கடன் சுமைக்குள் நாம் சிக்கியுள்ளோம்.

உண்மையில் வாங்கிய கடனில் இருந்து பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டிருந்தால், அதன் பலனை இப்போது அனுபவித்திருக்க வேண்டும். இதுவரை காலமும் வாங்கிய கடனை அவ்வாறே நாட்டின் உற்பத்தி செயல்முறைக்கு பயன்படுத்தாமையினால் தான், அக்கடனில் வட்டி உருவாக்கப் பட்டுள்ளது.

"இடைக்கால நிலையான கணக்கின் முதல் நான்கு மாதங்களுக்கு 1000 பில்லியன் ரூபா தொடர்ச்சியான செலவுகள் (வாடகை தவிர) 1000 பில்லியன் ரூபாய்களும், மூலதனச் செலவுகளுக்காக 425 பில்லியன் ரூபாய்களும், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு மேலதிகமாக ஏனைய கடன் சேவை முறைகளுக்கு 1175 பில்லியன் ரூபாய்களும் அவசியம்.

அதன்படி மொத்த மதிப்பீடு 2 600 பில்லியன் ரூபாய்களாகும்.

அரசாங்கத்தின் வருமான மதிப்பீடு 1 600 பில்லியன் ரூபாய்கள் எனவும் அடிப்படைக் கடன் பெற்றுக் கொள்வதற்கான வரையறை 1000 பில்லியன் ரூபாய்கள்" என்றும் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்ணான்டோ மேலும் தெளிவுபடுத்தினார். (ம-7)

# முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே கைது

(கொழும்பு)

பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்துத் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அவரைப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் நேற்று முன்தினம் (05) உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நுவரெலியா பஸ் டிப்போ காவலாளி கொலை

## சுமார் 9 இலட்சம் பணம் திருட்டு

நுவரெலியா லங்கம டிப்போவில் கடமையாற்றிய காவலாளியைக் கொலை செய்து வங்கியில் வைப்பிலிடப்படவிருந்த சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நுவரெலியாப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

டிப்போவில் காவலராக பணியாற்றிய நுவரெலியா கல்பாய பிரதேசத்தைச் சேர்ந்த கே.லோகேஸ்வரன் என்ற நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சிலர் காவலாளியைக் கொன்றுவிட்டு டிப்போவில் இருந்த அலுமாரியில் இருந்து சுமார் ஒன்பது லட்சம் ரூபாயை எடுத்துச் சென்றது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

[illegible]ருந்தார். அப்போது சில கும்பல் கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கிப் பணத்தை எடுத்துச் சென்றுள்ளது.

கொலைச் சம்பவத்தின் போது டிப்போவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரும், காசாளரும் டிப்போவில் தங்கியிருந்த போதிலும், அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா லங்கம டிப்போவில் வியாழக் கிழமை (05) பிற்பகல் ஓடிய பஸ்களின் வருமானம் வங்கியில் வைப்பிலிடுவதற்காக அலுமாரியில் வைக்கப்பட்டிருந்ததாக அந்த டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-7)

# 14 வயது சிறுமி கொலை உடல் கழிவறைக் குழியில்

பதினான்கு வயது சிறுமி கொலை செய்யப்பட்டு சடலம், கட்டப்பட்டு வரும் கழிவறை குழியில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் தனது 14 வயது மகள் காணாமல் போயுள்ளதாகக் கம்பஹா, அகரவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் இரவு பொலிஸில் முறைப்பாடு அளித்த நிலையில், நடத்திய விசாரணையின் பின்னர், இந்தக் கொலைக்கான அடிப்படைக் காரணத்தைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கொலையில் தனது இரண்டாவது கணவர் மீது சந்தேகம் இருப்பதாக சிறுமியின் தாய் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கண்டுபிடிக்கப்பட்ட தகவலின்படி முறைப்பாட்டாளரின் இரண்டாவது கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின்படி, சந்தேகநபர் சிறுமியை கொன்றுவிட்டு, நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டின் பின்புறத்தில் உள்ள கழிவறையில் சடலத்தை வைத்து கான்கிரீட் பலகையால் மூடியிருப்பது தெரிய வந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல் குற்றவாளிகளுக்கு தடை கோருகிறார் யஸ்மின் சூக்கா



(ஜொஹனஸ்பேர்க்)

**இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மீறல் குற்றங்களிலும், ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிராக தடைகளையும், நுழைவு அனுமதித்தடையையும் விதிக்குமாறு சர்வசேத உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் வலியுறுத்தியுள்ளது.**

அதனுடன் தொடர்புடைய 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளையும் ஆவணங்களையும், அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசாங்கங்களுக்கும், ஐ.நா சபைக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அனுப்பிவைத்திருக்கிறது.

ஜொஹனஸ்பேர்க்கை தளமாகக்கொண்டு யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கிவரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டமானது இலங்கையின் அரச மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிரான தடைகள் மற்றும் விசா அனுமதி தடைகள் தொடர்பான 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப்பதிவுகளையும் கோரியிருக்கிறது.

மனித உரிமைகள் தினத்தையொட்டி தயாரிக்கப்பட்டிருக்கும் இக்கோரிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள், நீதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல் மோசடிகள் என்பன பற்றியவையாக இருக்கின்றன.

உள்நாட்டு யுத்தத்தின் போதும், அதற்குப் பின்னரு மான காலப்பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், பலவந்தமான கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மனித உரிமை மீறல்களும், நாட்டின் அரச கட்டமைப்புக்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பாரிய ஊழல்களும் இக்குற்றங்களில் அடங்குகின்றன.

அதுமாத்திரமன்றி இம் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலான முறையற்ற தலையீடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் என்பனவும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக 1980 களின் இறுதியில் இலங்கையில் பணியாற்றிய இந்திய அமைதி காக்கும் படையினரால் நிகழ்த்தப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய இந்திய அமைதி காக்கும் படையின் முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராகவும் தடைகளை விதிக்கும்படி மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் கோரப்பட்டுள்ளள.

இந்நடவடிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, "கடந்தகால மீறல்கள் தொடர்பில் இற்றைவரை பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத நிலையில், கடந்த கால மற்றும் சமகால குற்றங்களை ஆவணப்படுத்தி அவற்றுக்கான சான்றுகளைப் பகுப்பாய்வு செய்து, உண்மையைக் கண்டறிவதற்கு ஏதுவான சகல வழிமுறைகளையும் உரியவாறு பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டனின் தற்போதைய புதிய அரசாங்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தடைகளை விதிக்கும் என எதிர்பார்க்கின்றோம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-8)

# சைவப் பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதன்



2024 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் சரி, ஈழத்தமிழர்களுக்கும் சரி மிக முக்கியமானதொரு ஆண்டு. பல விடயங்களை மீள நினைத்துப் பார்க்க-வரலாற்றை மீட்டிப் பார்க்க வைக்கும் ஆண்டு.

- உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியராக நாம் கொண்டாடும் ஈழத்தமிழ்ப் பேராசிரியர் பாரம்பரியத்தின் தொடக்கமாகிய சுவாமி விபுலானந்தர் துறவறம் பூண்டு நூற்றாண்டு.
- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு.
- இலங்கையில் சுதேசிய பல்கலைக்கழகங்களின் தந்தை எனப் போற்றப்படும் சேர்.பொன் அருணாசலம் அவர்களின் நினைவு நூற்றாண்டு.
- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு.
- 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்று 50 ஆவது ஆண்டு.

இவ்வாறு 2024 ஆம் ஆண்டு மிக முக்கியமானதொரு ஆண்டு. அந்த வகையிலே இவ்வாறான மிக முக்கியமான ஓர் ஆண்டிலே நாங்கள் நீள நினைந்து வணங்க வேண்டிய ஒருவர் சேர்.பொன்.இராமநாதன்.

யாழ்ப்பாணத்தவராகினும் யாழ்ப்பாணத்தவருக்கு அறிமுகமில்லாத சென்னைப் பட்டினத்தில் படித்து விட்டு வந்த ஒரு 25 வயது இளைஞனை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அந்த இளைஞனை அன்று நாவலரைத் தவிர, வேறு எவரும் நினைத்திருக்கமாட்டார்கள். இனிவரும் அரை நூற்றாண்டுக்கு அந்த இளைஞனே ஈழத்தமிழர் வாழ்வில் தவிர்க்க முடியாத சக்தியாக இருப்பான் என்று.

சேர்.பொன்.இராமநாதன் ஒரு தேசியத் தலைவர். தமிழ் மக்கள் மட்டுமின்றி இலங்கை மக்கள் அனைவரும் கொண்டாடிய ஒரு தலைவர். கல்வி கற்ற இலங்கையர் என்று முதன் முதல் சட்டசபைக்கு ஒரு சுதேசிய பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டபோது இலங்கை மக்கள் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டவர் சேர். பொன். இராமநாதன்.

1915 ஆம் ஆண்டு மதுவரிக் கலவரத்திலே சிங்களத் தலைவர்களைக் கைது செய்து கொண்டு சென்ற போது, பிரித்தானியா சென்று வாதாடி அவர்களை மீட்டு வந்தவர் சேர்.பொன். இராமநாதன். அவர் நாடு திரும்பிய போது தம் நன்றியைச் செலுத்தும் விதமாக சிங்களத் தலைவர்கள் அவரைக் குதிரை வண்டியில் ஏற்றி காலிமுகத்திடலிலே இழுத்து வந்தனர் என்பது வரலாறு.

இவ்வாறு அனைத்து மக்களாலும் கொண்டாடப்பட்ட தலைவர் சேர்.பொன் இராமநாதன். அவர் மட்டுமின்றி அவர சகோதரர் சேர்.பொன். அருணாச்சலம் மற்றும் லேடி லீலாவதி இராமநாதன் என அவரது குடும்பமே இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் செய்த பணிகள் ஏராளம்.

அதற்கு அடையாளமாய் எழுந்து நிற்பவை தான் பரமேஸ்வராக் கல்லூரியாக இருந்த எமது பல்கலைக் கழகமும் இராமநாதன் மகளிர் கல்லூரியும் இவை என்றும் எம் மண்ணின் இரு பெரும் சொத்துக்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 50 ஆவது ஆண்டில் நாம் பயணித்துக் கொண்டுள்ளோம். இந்தக் கணத்திலே நாம் நீள நினைக்க வேண்டிய இன்னுமொருவர் மிக முக்கியமான ஒருவர்-லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார்.

சேர்.பொன்.இராமநாதன் கண்ட கனவு அனைத்துக்கும் உயிர் கொடுத்த பெருமை அம்மையாரையே சேரும். இன்று எமது பல்கலைக்கழகம் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதற்கு மிக முக்கியமான காரணம் அம்மையார் அவர்களே. அந்த வகையிலே அம்மையாரை நினைத்துப் பார்க்க வேண்டிய கடப்பாடும் எமக்கு உண்டு. அம்மையாரின் சிந்தையாலே எழுந்து நிற்பதுதான் எம் பரமேஸ்வரர் ஆலயம் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது.

அந்தவகையில் அம்மையாரும் சைவப்பெருவள்ளல் சேர்.பொன். இராமநாதன் அவர்களும் இந்த மண்ணுக்குச் செய்தவை அளப்பெரியன. அவர்களையும் அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர வேண்டிய கடப்பாடு ஈழத் தமிழர்களுக்கும் மிக முக்கியமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகமாகிய எமக்கும் உண்டு.

அந்தவகையிலே சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய 94 ஆவது குரு பூசை தினத்திலே அவரை நினைவு கூருவதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் பெருமை கொள்கின்றது.

**யோ.நிவேதன்,**
**சோகினா கிருபாகரன்.**
**இந்து மாமன்றம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களை...

பிரதி அமைச்சர் வைத்தியர் ஹசங்க விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஏகமனதாக...

கள் பட்ஜெட் மீது வாக்கெடுப்பைக் கோராத காரணத்தால் அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அஷோக்க ரன்வல சபைக்கு அறிவித்தார்.

அதன் பிரகாரம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசின் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான 4 மாத காலப் பகுதிக்கான பட்ஜெட் 9,60,500 கோடி ரூபாயுக்கு பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றது. (ம-7)

## அரசி, தேங்காய்...

எடுக்கப்பட்டுள்ளதாக, சுங்க ஊடகப் பேச்சாளர் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

இதேவேளை, சந்தையில் தேங்காய் விலை உயர்வைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## விபரீத...

குடும்பஸ்தர் நேற்றுத் தூக்கிட்டு உயிரிழந்துள்ளார்.

இதில் ச.நிரோசன் (வயது-32) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சடலம் மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அரசியலமைப்புக்...

தெரிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரனை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் முன்மொழிய, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதனை வரவேற்று, சிறீதரனது நியமனத்தின் தேவைப்பாட்டையும் வலியுறுத்தியிருந்தார்.

சமநேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானை நாமல் ராஜபக்ஷ முன்மொழிந்தார்.

அதேவேளை மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் தன்னைத்தானே பிரேரித்தபோதும், பின்னர் போட்டியிலிருந்து தானாகவே விலகியிருந்தார்.

அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் அடிப்படையில் அரசியலமைப்புக் குழுவின் பிரதிநிதியாக சிவஞானம் சிறீதரன் தெரிவாகியுள்ளார்.

குறித்துரைக்கப்பட்ட 25 பாராளுமன்ற உறுப்பினர்களில் இருவர் சமுகமளிக்காததுடன், முஸ்லிம் காங்கிரஸின் இரு உறுப்பினர்களும் வாக்கெடுப்பிலிருந்து வெளியேறியிருந்த நிலையில் சிவஞானம் சிறீதரன் 11 வாக்குகளையும், ஜீவன் தொண்டமான் 10 வாக்குகளையும் பெற்றுக்கொண்ட தற்கமைய ஒருவாக்கு வித்தியாசத்தில் அரசியலமைப்புக் குழுவின் உறுப்பினராக சிறீதரன் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மதுபான...

மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1/2024 மதுபான அனுமதிப்பத்திரத்துக்கான வருடாந்தக் கட்டணத்தை ரூபா 20 மில்லியனாக உயர்த்தியதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உரிமக் கட்டணத்தை அறவிட உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (ம-7)

## சீனி வரியை...

படுமென, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிவப்புச் சீனி அத்தியாவசியமற்ற பொருளாகவும், இலங்கைக்கு வெளியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனி அத்தியாவசியப் பொருளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக, தெரிவித்த சுனில் ஹந்துன்நெத்தி, இந்த விடயம் கூடிய விரைவில் சரி செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

## வட மாகாணத்தில்...

களில் மாணவர் தொகை தொடர்ந்தும் குறைவடைந்தமையால் கல்வித்திணைக்களம் அவற்றை மூடி வருகிறது.

பாடசாலைகள் முன்பு தேசிய மயமாக்கப்பட்டபோது சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டமை மறக்க முடியாது. பாடசாலை இயங்காத நிலையில் பாடசாலைகளின் அசையாச்சொத்து ஸ்தாபகர் வழி வந்தவர்களுக்கு அல்லது ஸ்தாபித்த நிறுவனத்துக்கு அறிவித்து ஒப்படைக்க வேண்டும். சமீப காலத்தில் மூடப்பட்ட கந்தர்மடம் சைவப்பிரகாசா, அளவெட்டி சதானந்தா, நீர்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை போன்ற பாடசாலைகளின் எதிர்காலம் என்ன? இவ்விடயம் தொடர்பாக நல்ல முறையில் தீர்மானம் எடுக்க வேண்டும். வேறு அரச திணைக்களங்களுக்கு பாடசாலை ஸ்தாபித்த சமூகத்தின் ஆலோசனை பெறாது வழங்குவது தவறாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் புதிய துறைகளுக்கு இடமின்றி நிலம் தேடுகிறது. மூடப்படும் பாடசாலைகள் பல்கலைக் கழகம் போன்ற கல்விப் பணிக்குப் பயன்படுத்துதல் பொருத்தமாகும். பொறுப்புமிக்க அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ம-7)

## மீன்...

யைச் சேர்ந்த குரு என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை பேராறு நீர்த்தேக்கத்தின் வான்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நிலையில் நீருக்குள் தவறிவீழ்ந்து மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த மற்றொரு நபர் சம்பவம் தொடர்பாக ஊரமக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இதனையடுத்து குறித்த நபரைத் தேடும் பணி ஊரமக்களால் முன்னெடுக்கப்பட்டது.

நீண்டநேரமாக தேடுதல் இடம்பெற்றுவந்த நிலையில் சிலமணிநேரங்களின் பின்னர் அவரது சடலம் நீருக்குள் இருந்து மீட்கப்பட்டது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 5677
V 0 5 7 7 7 3
அத சம்பத
V 7 7 7 3
சீட்டிழுப்பு இலக்கம் 252
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1707
G 10 14 29 80 G
Double Chance 25155

மெகா பவர்
திகதி 06/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2025
S 01 02 19 55 67
091301

லக்கி 7 VIP
திகதி 2024.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 0503
K 4 2 7 3 2 2 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3919
சீட்டிழுப்பு திகதி 06.12.2024
S 04 22 48 78
S 092083
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.06
சீட்டிழுப்பு 986
துலாம் 06 22 24 31 துலாம்
150896 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.12.2024 வெற்றி வாரம் 385
E 8 2 6 4 2 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,766,856.80
77941
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2651
சீட்டிழுப்பு திகதி 2024.12.06 தினம் வெள்ளிக்கிழமை
33 38 47 51 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,380,357.60
DLB

சனிதா
06.12.2024 வெற்றி வாரம் 4812
39 44 67 70 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,490,392.40
61522
DLB

சசிரி
வெற்றி வாரம் 572
06.12.2024
வெள்ளிக்கிழமை
13 20 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4363
சீட்டிழுப்பு திகதி 06.12.2024 தினம் வெள்ளிக்கிழமை
22 23 26 53 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
168281
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 11 02 13 57 69
1827
06.12.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,411,565.00
DLB


அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2477
சீட்டிழுப்பு திகதி 2024.12.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,092,798.40
22 43 44 45 N
540672
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

சீனா(China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

**விலை 7000 ரூபாவிலிருந்து**



"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

**N5 எலக்ரிக்கல்ஸ்**

- 77, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

(2706)

**Hotline : 071 535 7799/ 071 554 7973**




# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சோமசுந்தரம்

### (உரிமையாளர் - அப்பையா அன்சன்ஸ்)



தோற்றம் 24.04.1941 மறைவு 04.12.2024

இல.655(288), ஆடியபாத வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சோமசுந்தரம் அவர்கள் 04.12.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்(அப்பையா) - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சந்தானலட்சுமியின்(சோதி அக்கா) அன்புக் கணவரும் பரமேஸ்வரன்(குமார்), சதீஸ்வரன்(தீசன்), யசோதரன் காலஞ்சென்ற தயாளன் மற்றும் மைதிலி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாராணி, றஜிதா, விக்கினதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நடராஜா, வைத்திலிங்கம் மற்றும் லட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அற்புதமலர் மற்றும் புவனேஸ்வரி, பதஞ்சலி காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் யதுஷனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 08.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி இல. : 077 704 6790, 021 222 6560, 071 848 6234

தகவல் : குடும்பத்தினர்

(C-1738)

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/Cகளும் பழுதடைந்து விட்டது என்று கவலையா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் செய்து கொடுக்கிறோம்.

(2710)

**076 834 6136**

## வீடு வாடகைக்கு

A9 வீதியில் அரியாலையில் TATA DIMO கொம்பனிக்கு அருகில் சகல அடிப்படை வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

(தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

தரகர் தேவையில்லை

(2702)

**077 6260 731**

## வடமராட்சியில்....

### உயர்தர வகுப்புக்கான,

வணிகப் புள்ளிவிபரவியல் (Business statistics) மற்றும் அளவையியலும் விஞ்ஞானமுறையும் (Logic) பாடங்களுக்கான வகுப்புகள் தனியாகவும் குழுவாகவும் நேரடியாகக் கற்பிக்கப்படும்.

**R.Eeswaran, 076 871 5427**

(601) easwaran1014@gmail.com

## HONDA ஜெனரேட்டர்கள் விற்பனைக்கு

ஜப்பான் உற்பத்தியிலான புதிய HONDA ஜெனரேட்டர்கள் (2kv , 5.5kv) மானிப்பாய் பகுதியில் விற்பனைக்கு உள்ளது.

(2708)

**077 5890 043**

## பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆட்சேர்த்தல்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

EPF ,ETF உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

உணவு மற்றும் சிற்றுண்டி முற்றிலும் இலவசம்.

வயது எல்லை : 40 - 65

(2705)

**074 3303 985 / 071 4993 990**

## வீடு வாடகைக்கு உண்டு

நாவலர் வீதிக்கு அண்மையில் வீடு வாடகைக்குண்டு.

களஞ்சியப்படுத்தல் (Store) / அலுவலக (Office) தேவைக்குப் பயன்படுத்தலாம்.

(2703)

தொடர்பு

**076 7900 607**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- **பார்வையிடும் நேரம்**

காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

(2712)

**077 814 7389, 077 986 5457**

## V2 VISA SERVICES

### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1736)

## வேலையாட்கள் தேவை

ஆவரங்காலில் உள்ள அசைவ உணவகத்திற்கு சமையல் மற்றும் கொத்து, றைஸ், அப்பம் போடத் தெரிந்த வேலையாட்கள் இருவர் தேவை. குறிப்பு : முன் அனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(602)

**076 844 2592**
**077 783 6878**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 01 5Kg Prima மா/பை | - 920/= | ~~1150~~/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg றவை | - 290/= | |
| 1Kg பயறு | - 570/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 688/= | |
| 1Kg மல்லி | - 380/= | |
| 01 10Kg விஜிதா அரிசி | - 2810/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 780/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 285/= | |
| 500g சமபோஷா | - 379/= | ~~420~~/= |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | ~~240~~/= |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 990/= | ~~1050~~/= |

1Kg சன்லைட் பவுடர்




320/= ~~360~~/=

Max 01

400g Anchor




987/= ~~1050~~/=

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(605)

**Happy Supermarket**
**0777 8080 30**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.